Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 286/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | |
| பெயர். | - | இளவரசு | வட்டம் | - | |
| த/பெ. | | மாரிமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | | வயது | - | |

21.11.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் வக்கீல் கார்த்தி எழுதினார். அந்த புகாரில் என்ன இருந்தது என்று தெரியாது, கையெழுத்து போட சொன்னார், கையெழுத்து போட்டேன் என்றால் தெரியும். புகார் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 15.05.2020.

2. நான் கொடுத்த புகாரில் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புகாரை காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் காலை 11.30 மணி இருக்கும், சரியாக தெரியவில்லை. நான் விடுதலை சிறுத்தை கட்சியில் ஒன்றிய துணை செயலாளராகவும், தற்போது ஒன்றிய செயலாளராகவும் உள்ளேன்.

3. புகாரில் ஒன்றிய துணை செயலாளர் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் வி.சி.க. கட்சியில் மொத்தம் எத்தனை ஒன்றிய

செயலாளர்கள் உள்ளார்கள் என்றால் 4 பேர். எதிரி குமாரமங்கலத்தை சேர்ந்தவர். சம்பவம் நடந்த போது அந்த பகுதியில் ஒன்றிய செயலாளராக இளங்கோவன் இருந்தார் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் வடிவேல், சத்தியராஜ் (எ) சமத்துவன், ராகவேந்திரன், பிரவீன், கிருபாநிதி ஆகியோர் உடன் இருந்தார்கள். இவர்கள் யாரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் அல்ல வெளியூரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான்.

4. சம்பவ காலத்தில் பதிவு போட்டதாக சொல்கிறேனே யாருடைய பெயரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பதிவை போட்ட நபர் இன்னார் என்று சொல்லவில்லை, அந்த கேலிசித்தரத்தில் உள்ள நபரும் நான் தான் என்று ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

5. பொதுவாக கேலிச்சித்திரம் என்பது சமூக அவலங்களையும், மக்களுடைய அன்றாட பிரச்சனைகளையும் மக்கள் எளிதில் புரிந்துக்கொள்ள சித்திரம் என்றால் சரிதான். அந்த சித்திரம் யாருடைய மனதையும் புன்படுத்தும் நோக்கத்தில் இல்லை என்றால் புன்படுத்தியதால் தான் இந்த புகாரே கொடுத்தோம். அப்படி புன்படுத்தியதாக நினைத்திருந்தால் எங்கள் தலைவரே தமிழகத்தில் உள்ள ஏதேனும் ஒரு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார் என்றால் அவர் கொடுக்கவில்லை.

6. புகாரிலும், நான் கொடுத்த சி.டி-லும் எந்த தேதியில், எந்த நேரத்தில் வெளியிடப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சமூக வளைதளங்களில் ஒருவர் பேரில் பல போலி கணக்குகள் ஏற்படுத்த வாய்ப்புள்ளதா என்றால் அது மாறி நிறைய செய்கிறார்கள்.

7. ஒரே உருவம் கொண்ட 7 நபர்கள் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை நான் நம்புகிறேனா, ஒத்துக்கிறேனா என்றால் அது எனக்கு தெரியாது. என் புகாரில் எதிரி பெயரை வர்மா கார்டுடினிஸ்ட் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் பெயரையும், அவரது தகப்பனார் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. எதிரியுடைய பெயரும், அவரது தகப்பனார் பெயரையும் போலீசார் விசாரணை செய்யும் போது தான் சொன்னார்கள், இதற்கு முன் எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி சமூகவளைதளத்தில் நான் சொல்லும் பதிவை பதியவில்லை என்றாலும், எதிரி மீது நான் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், விளம்பரம் தேட நினைக்கிறேன் என்றாலும் அது தவறு. ஒரு பொய்யான புகார் கொடுத்து கட்சி தலைவரிடம் நல்ல பெயரை வாங்கவும், தற்போது இருக்கும் பதவியை விட மேலான பதவி பெறவும், வரும் சட்டமன்ற தொகுதியில் வரும் தேர்தலில் கட்சி சார்பாக சீட் வாங்கவும் என்றால் அதற்கான அவசியம் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை

என்றால் சரியல்ல. எனது செல்போனில் வந்த படத்தை தான் சி.டி. ஆக போட்டு போலீசிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 286/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | |
| பெயர். | - | வடிவேல் | வட்டம் | - | |
| த/பெ. | | தண்டபாணி | சமயம் | - | |
| கிராமம் | - | | வயது | - | |

21.11.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். புகாரை இளவரசு கொடுத்தார். அவர் சம்பவம் நடந்த போது ஒன்றிய செயலாளராக இருந்தார். எதற்காக புகார் கொடுத்தோம் என்றால் தலைவரை கார்டூன் வரைபடத்தில் சித்தரித்து இருந்தார்கள். புகார் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் இளவரசு, நானும், சத்தியராஜ் ஆகியோர் இருந்தோம்.

2. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது இளவரசு சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம், கார்டூன் வரைந்ததை அவர் பார்த்தார் என்று சொன்னார். எதில் பார்த்தேன் என்றால் பேஸ்புக்கில். புகாரை காலை 11.00 மணிக்கு 18.05.2020 அன்று கொடுத்தோம். போலீசார் என்னை 2 நாள் கழித்து காந்திகுப்பத்தில் வைத்து 04.00 மணிக்கு விசாரணை செய்தார்கள்.

3. போலீசார் விசாரணையில் முகநூலில் ஒருவர் பதிவு போடும் போது எத்தனை மணிக்கு எந்த தேதியில் பதிவு போட்டார் என்ற விவரம் இருக்கும், இதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் திருவெண்ணெய்நல்லூர் ஒன்றிய செயலாளராக இருந்தேன். எதிரியின் பெயர் என்னவென்றால் வர்மா கார்டுடினிஸ்ட். எதிரியின் பெயர் தெரியுமா என்றால் வர்மா கார்டுடினிஸ்ட். போலீசார் என்னை விசாரணை செய்யும் போது தான் எதிரியின் பெயர் வர்மா கார்டுடினிஸ்ட் என்று தெரியுமா என்றால் பெயர் அப்ப தான் தெரியும்.

4. எதிரி எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்றால் மாற்று சமூகத்தை சேர்ந்தவர். யார் வேண்டுமானாலும் வேறொருவரின் பெயரை வைத்து பொய்யாக முகநூல் பக்கம் உருவாக்க முடியும் என்று தெரியுமா

என்றால் தெரியும். போலீசார் என்னை விசாரிக்கும் போது ஆய்வாளர், உதவியாளர் விசாரிக்கவில்லை, கான்ஸ்டேபின் தான் விசாரித்தார். எனக்கு சம்பவமே தெரியாது என்றாலும், அ.சா.1 கொடுத்த புகார் பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் கார்டூன் பற்றி தகவல் சொன்னதன் அடிப்படையில் தான் புகார் கொடுத்தோம். அந்த கார்டூனை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கார்டூனில் எங்கேயாவது குறிப்பிட்டு சொன்னார்களா என்றால் தலைவருடைய ஜாடை இருந்தது.

5. தலைவர் போலவே அவர் ஜாடையில் நிறைய பேர் இருக்கிறார்கள், உதாரணத்திற்கு பண்ரூட்டியில் ரமேஷ் என்பவர் தலைவரை போலவே அச்சு அசலாக உள்ளார் என்றால் இருக்கலாம். ஜாடையை வைத்து இன்னார் என்று முடிவு செய்ய முடியாது என்றால் தலைவர் போல இருக்கிறார் என்று தான் நாங்கள் நம்பினோம்.

6. முகநூலில் தலைவர் படத்திற்கு கீழே பெயரோ, வேட்டியின் கீழ் பெயரோ, இன்னார் வேட்டியென்றோ எழுத்தால் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், படம் தான் இருந்தது. போலீசார் விசாரணையில் எதிரியின் செல்போன் எண்ணையோ, மின்னஞ்சல் முகவரியோ குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. எதிரி குமாரமங்கலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரியின் பெயர் தற்போது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுரேந்தர்.

7. சம்பவத்தின் போது குமாரமங்கலத்தில் யார் ஒன்றிய செயலாளர் என்றால் கி.கா. அறிந்தவன். சம்பவம் சம்மந்தமாக அறிந்தவன் தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்றும், அ.சா.1 சம்மந்தம் இல்லாமல் சுயவிளம்பரத்திற்காக புகார் கொடுத்துள்ளார், அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 286/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | |
| பெயர். | - | சத்தியராஜ் | வட்டம் | - | |
| த/பெ. | | மூர்த்தி | சமயம் | - | |
| கிராமம் | - | | வயது | - | |

21.11.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. எனது உண்மையான பெயர் சத்தியராஜ் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்மந்தமாகவும், போலீசார் விசாரணையிலும் எனது பெயர் சத்தியராஜ் என்று தான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அ.சா.1 18.05.2020 ல் புகார் கொடுத்தார். எத்தனை மணிக்கு கொடுத்தார் என்று டைம் தெரியவில்லை. அ.சா.1 புகார் கொடுக்கும் போது நானும், வடிவேல், பிரதீப், ஜீவன், அறவாழி, கிருபாநிதி ஆகியோர்கள் இருந்தோம்.

2. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் அன்றைக்கே காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். முகநூல் பதிவை அ.சா.1 அவருடைய போனிலிருந்து தான் காட்டினார் என்றால் ஆமாம், அதன் பிறகு எங்கள் ஐ.டி-ல் பார்த்தோம். சம்பவம் நடந்த போது நான் கட்சியில் ஒன்றிய துணை செயலாளராகவும், அ.சா.1 ஒன்றிய செயலாளராகவும் இருந்தார்.

3. எங்கள் கட்சியில் எத்தனை ஒன்றிய செயலாளர் என்றால் 4 பேர். எதிரியினுடைய ஊர் குமாரமங்கலம் கிழக்கு ஒன்றியத்தில் வருகிறது, அதன் ஒன்றிய செயலாளர் ராஜபார்ட் (எ) அறிந்தவன் என்றால் சரிதான். பொதுவாக சமூகவளைதளத்தில் ஒருவருடைய பெயரில் பல போலி கணக்குகள் துவங்க வாய்ப்புள்ளது என்றால் ஆமாம்.

4. இந்த வழக்கில் எதிரியின் மின்னஞ்சல் முகவரியோ, போன் நெம்பரையோ குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் வர்மா கார்டுடினிஸ்ட் ஐடியை சொல்லியுள்ளேன், அவர் அதை ரொம்ப நாளாக பயன்படுத்தியுள்ளார், அவர் அதன் பிறகு Behindwoods என்ற யூ.டியூப் சேனலில் அதன் பிறகு கொடுத்த பேட்டியில் நான் தான் வர்மா கார்டுடினிஸ்ட் பெயரில் கார்டூன் போட்டதாக ஒத்துக்கொண்டு, அதில் என்ன தப்பு உள்ளது என்று கேட்டார். மேற்சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் கேட்கவில்லை, அதனால்சொல்லவில்லை, தற்போது ஏன் சொல்கிறேன் என்றால் நீங்கள் அந்த ஐ.டி அவருடையதாக இருக்காது என்று சொன்னதால் சொல்கிறேன்.

5. வர்மா கார்டுடினிஸ்ட் ஐ.டி -ஐ நான் தான் பார்த்து அ.சா.1-டம் சொன்னார் என்றால்இல்லை, அவர் தான் பார்த்து என்னிடம் சொன்னார். சமூகவளைதளத்தில் கார்டூனிற்கு கீழ் எனது தலைவரின் பெயரையோ, கரைவேட்டியின் பெயரையோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் அதிலிருந்த உருவம் எங்கள் தலைவரின் உருவம். எதிரி அந்தஉருவம் எங்கள் தலைவரின் உருவம் இல்லை என்று சொல்கிறார் என்றால் அவர் தப்பிக்க என்ன வேண்டுமானாலும் சொல்வார்.

6. நான் பேஸ்புக் பயன்படுத்துகிறேன், போன் நெம்பர் போட்டு கணக்கை துவங்கினேன். போலீசார் விசாரணையில் போன் நெம்பரையோ, ஐ-டி -யோ குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சமூகவளைதளத்தில் ஒரு நபர் பேரில் பல்வேறு கணக்குள் பொய்யாக துவக்க வாய்ப்பிருக்கா இல்லையா என்றால் உள்ளது, இவர் ஏற்கனவே முஸ்லீம்களின் கடவுளான முகமது நபியின் பெயரில் ஒரு கார்டூனை வரைந்து அதன் பேரில் ஒரு எப்.ஐ.ஆர் போடப்பட்டு நிலுவையில் இருக்கிறது. இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, தற்போது தன்னிச்சையாக சொல்கிறேன்.

7. சமூகவளைதளத்தில் உள்ள ஒரு பதிவை போடுபவர் இன்னார் என்று குறிப்பிட்டு சொல்ல வேண்டும், அந்த பதிவில் உள்ள படத்தில் உள்ள நபர் என்னுடைய படம் தான் அவராவது ஒத்துக்கொள்ளவேண்டும் என்றால் அது தெரியவில்லை, எங்க தலைவர் எதிரிக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

8. எங்கள் கட்சியில் சமூக அவலங்களை கார்டூனாக வரைபவர்கள் உள்ளார்களா என்றால் இருப்பார்கள், ஆனால் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட கார்டூன் சமூக அவலங்கள் எதுவும்

சுட்டிக்காட்டவில்லை, தனிநபர் தாக்குதல் மட்டுமே உள்ளது. புகாருடன் சி.டி-ஐ கொடுத்ததாக சொல்கிறேனே யார், யார் கொடுத்தோம் என்றால் திருவெண்ணெய்நல்லூர் ரமேஷ் டிஜிட்டல் கடையிலிருந்து எடுத்து சி.டி போட்டு போலீசிடம் கொடுத்தோம், அ.சா.1ன் போனில் பார்த்தோம். போலீசாரிடம் கொடுக்கும் போது நானும், அ.சா.1ம் இருந்தோம், பக்கத்தில் யார் இருந்தார்கள் என்று தெரியாது.

9. எதிரியின் பெயர் என்னவென்றால் சுரேந்தர். வழக்கு முன்பு அவர் எனக்கு தெரியாது. போலீசார் சொல்லி தான் அவர் பெயர் சுரேந்தர் என்று தெரியுமா என்றால் ஆமாம். அவர் குமாரமங்கலத்தை சேர்ந்தவர். போலீசார் அந்த ஐ.டி மூலம் அவர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று கண்டுபிடித்து சொன்னார்கள். அதே போல் ஒருவருடைய உருவம் கொண்ட 7 நபர்கள் இருப்பார்கள் என்று ஒத்துக்கொள்கிறேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை.

10. வரைபடத்தை எத்தனை மணிக்கு பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, அ.சா.1 புகாரில் சொல்லியிருப்பார், எனக்கு தெரியவில்லை. என்னை எந்த போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஆய்வாளரரும், உதவியாளரும் விசாரித்தார்கள். தலைவர் போலவே உருவம் கொண்டவர்கள் எங்கள் கட்சியில் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். பண்ரூட்டி ரமேஷ் எங்கள் தலைவரே போல இருப்பார் என்றால் ஆமாம், ஆனால் எதிரிக்கு அவரை தெரியாது.

11. சம்பவ சமயத்தில் கார்டுடினிஸ்ட் வர்மாவை எனக்கு தெரியாது என்றால் சரிதான், அதன் பிறகு தான் போலீசார் சொல்லி எனக்கு தெரியும். கேலிச்சித்திரம் வரைவதற்கு யாரையும் யாருக்கு தெரிய வேண்டிய அவசியம் இல்லை, சமூக அவலங்களை படமாக வரைய தெரிந்தால் போதும் என்றால் அவரை தெரியாமல் அவருடைய உருவத்தை எப்படி வரைய முடியும் என்று சாட்சி கேட்கிறார். அ.சா.1 சம்மந்தம் இல்லாமல் சுயவிளம்பரத்திற்காக புகார் கொடுத்துள்ளார், அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அந்த படத்தை பார்த்த பல லட்சம்பேருக்கு அந்த படம் மனஉளைச்சலை உருவாக்கியுள்ளது.

12. எதிரியின் ஊர் குமாரமங்கலம், ரமேஷின் ஊர் 10 கி.மீதொலைவில் தான் உள்ளதா என்றால் எதிரி ரமேஷ் தான் என்று சொல்ல வேண்டும். அந்த படத்தை பார்த்த பல லட்சம்பேருக்கு அந்த படம் மனஉளைச்சலை உருவாக்கியுள்ளது என்று சொல்கிறேனே வேறு யாராவது இது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளார்களா என்றால் நாங்கள் எதிரியின் ஊரான குமாரமங்கலத்தை சேர்ந்தவர் என்பதால் புகார் கொடுத்துள்ளோம்.

13. சமூகவளைதளத்தில் வந்த பதிவு சம்மந்தமாக எங்கள் தலைவர் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் அவர் கொடுக்கவில்லை, நாங்கள் தான் கொடுத்தோம். எதிரி இந்த படம் வரைவதற்கு முன்பு எதாவது கட்சியில் இருந்ததாக தெரிந்துகொண்டேனா என்றால் அவர் முன்னால் பேட்டியில் பா.ம.க.வில் இருந்ததாக சொல்லியுள்ளார். இது

அ.சா.1 ற்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, நான் பேட்டியை பார்த்தேன். இந்த வழக்கில் எதிரி கைது செய்யப்பட்டு, பிணையில் வந்த பிறகு 10 நாள் கழித்து அவரது மனக்குமறலை தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பேட்டியாக கொடுத்தார், அந்த பேட்டியை நான் பார்த்துவிட்டு தற்சமயம் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் நான் மிகைப்படுத்தி சொல்லவில்லை, அதை அவர் வாயால் தான் சொன்னதை தற்போது சொல்லியுள்ளேன். அதை ஆவணமாக நீதிமன்றத்தில் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் கேட்டால் கொடுக்கிறேன். அந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் இதற்கு முன்னால் யாரும் கேட்கவில்லை, அதனால் சொல்லவில்லை. போலீசார் சொன்ன பிறகு தான் எதிரி யார் என்று தெரியும் அதற்கு முன்னால் எதிரியை தெரியாது, வர்மா கார்டூனிஸ்ட் என்று தான் தெரியும் என்றால் ஆமாம், கியூ பிரான்ச் போலீசார் தான் கண்டுபிடித்து சொன்னார்கள்.

14. அதே போல் அ.சா.1 சொல்ற மாதிரி சமூகவளைதளத்தில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் அப்படி ஒரு நிகழ்வும் நடக்கவில்லை என்றும், யாரோ எங்கோ போட்ட படத்தை எதிரி கார்டூன் வரைபவர் என்று தெரிந்து அவர் வன்னியர் வகுப்பை சார்ந்தவர் என்று தெரிந்து அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்துள்ளார், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் வர்மா கார்டுடினிஸ்ட் என்பவர் யார் என்று தெரியாது, எந்த ஜாதி, எந்த மதத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியாது என்று தான் புகார் கொடுத்தோம். போலீசார் விசாரித்த பிறகு தான் யார் என்று கண்டுபிடித்தார்கள்.

15. புகார் கொடுத்த பிறகு போலீசார் கண்டுபிடித்து சொன்னார்களா அல்லது கண்டுபிடித்து சொல்லிய பிறகு புகார் கொடுத்தேனா என்றால் போலீசார் கண்டுபிடித்து சொன்ன போதுதான் புகார் கொடுத்தோம். போலீசார் தான் எதிரியை எங்களிடம் சொன்னார்கள் என்றும், போலீசுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்எ ன்றால் போலிசுக்கோ, அ.சா.1 ற்கோ விளம்பரம் தேட வேண்டிய அவசியம் இல்லை, எதிரிக்கு தான் விளம்பரம் தேவைப்படுகிறது.

16. எதிரிக்கும், திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தாருக்கும் ஏற்கனவே பகை இருக்கிறது, அந்த பகையை பயன்படுத்தி எதிரி மீது தவறாக சொல்கிறார்கள் என்றால் போலீஸ் சொல்லி நாங்கள் புகாரை தரவில்லை. ஏற்கனவே கியூபிரான்ச் போலீசார் தான் எதிரியை அடையாளம் காட்டி சொன்னார்கள் என்று சொல்லிவிட்டு, போலீசாருக்கு அனுசரணையாக தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் நான் எதையும்மாற்றி சொல்வில்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மை என்றால் எதிரியின் ஊர்பெயர், அப்பா பெயர் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் எதிரியை யார் என்று தெரியாமல் புகார் கொடுத்தோம், போலீசார் விசாரித்து இவர் தான் என்று சொன்னார்கள். இந்த வழக்கே உளவுத்துறை

போலீசாரால் தான் ஏற்பட்டது, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லைஎன்றால் உளவுத்துறை ஜோடிக்கும் அளவுக்கு அவர் பெரிய கார்டுடினிஸ்டோ, அரசியல் வாதியோ, ஊடக விளம்பரளாளரோ இல்லை, உளவுத்துறைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன், நான் சொல்வது போல் அவர் பெரிய கார்டுடினிஸ்டோ, அரசியல் வாதியோ, ஊடக விளம்பரளாளரோ இல்லை சாதாரண ஆள் என்பதால் அவரை பழிவாங்கும் நோக்கில் உளவுத்துறை சொல்லி புகார் கொடுத்துள்ளோம் என்றால் எனக்கு எந்த உளவுத்துறையும் தெரியாது. இந்த வழக்கே ஒரு அரசியல் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றாலும, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் போலீசார் மீது தப்பா பழி சொல்கிறார். போலீசார் மீது தப்பாக பழி சொல்லவில்லை, இந்த வழக்கை போலீசார் சரியாக விசாரிக்கவில்லை என்றால் நீங்கள் அதை நிரூபித்து கொள்ளுங்கள் என்று சாட்சி சொல்கிறார்.

17. நானும், என் கட்சியை சேர்ந்தவரும் அடிக்கடி காவல் நிலையம் செல்வோம் என்றாலும், அதனால் போலீசாருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நாங்கள் அடிக்கடி போவதை அவர்கள் பார்த்தார்களா என்று சாட்சி கேட்கிறார். நான் நீங்கள் போனதாக குறிப்பிட்டு சொல்லவில்லை, கட்சிக்காரர்கள் போனதாக சொல்கிறேன் என்றால் பொய் வழக்கும் தரவில்லை, பொய் சாட்சியும் சொல்லவில்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சம்மந்தம் உள்ளது. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் உள்ளது என்று சொல்கிறேனே அது சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவருடைய ஐ.டி. -ஐ கொடுத்துள்ளோம். வேறு எதுவும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்டால் கொடுக்கிறோம்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.